2025 – ஏப்ரல் மாதம் 17– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 295 / 2023 C/W 296 / 2023*

*2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 1, R. மகாலட்சுமி |
| **கணவர்** பெயர் | : | சுந்தரகணபதி |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வயது | : | 51 |

**தேதி: 17.04.2025.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது பெரம்பலூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அங்கீகாரக்கடிதம் **எ.சா.ஆ.1,** பெரம்பலூர் காவல் நிலைய குற்ற எண் 533/2023 வழக்கில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனம் T N 46 Q 5304 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் வாகனத்தின் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரின் பெயர் தங்கராசு ஆகும். மேற்படி தங்கராசு என்பவர் தான் மேற்கூறிய வாகனத்தின் உரிமையாளர் என ஆவணங்கள் மூலம் தெரிகின்றது என்றால் சரிதான். மேற்படி தங்கராசு என்பவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை, அந்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடும் இல்லையென்றால் 31.12.2014 வரை காப்பீடு நடைமுறையில் இருந்தது. விபத்து சமயத்தில் காப்பீடு நடைமுறையில் இல்லை. விபத்திற்கு பின்னிட்டு மேற்படி இருசக்கர வாகனம் மோட்டார் வாகன

ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை. பொதுவாக விபத்து ஏற்பட்டால் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்குட்படுத்த வேண்டும் என்றால் சரிதான். T N 46 Q 5304 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்றும் விபத்து சமயத்தில் காப்பீடு நடைமுறையில் இல்லையென்றும், காட்டுவதற்குண்டான ஆவணம் 2– தாள்கள் அடங்கியது அது **எ.சா.ஆ.2** ஆக தாக்கல் செய்கின்றேன்.

**குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பில்):–**

விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை எப்போது வேண்டுமானாலும் காவல் துறையினர் மோட்டார் வாகன ஆய்விற்குட்படுத்தலாம் என்றால் எனக்கு தெரியவில்லை.

**மறு விசாரணை:–இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**